பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 08 2026 TUESDAY 12 40 PM ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரிக்ஸ் உறுப்பு நாடுகளில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

2. வெளிநாட்டு நிதி பங்களிப்பு திருத்த மசோதா வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் என்று மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

3. Zambia நாட்டு அதிபராக Hakainde Hichilema மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

4. இந்தியாவில் வாக்காளர் அடையாள அட்டை மூலம் தேர்தல் நடைபெறுவது மிகவும் சிறந்தது என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் பாராட்டியுள்ளார்.

5. Galle-யில் நடைபெறும் இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்

புதுதில்லியில், பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுச் சூழல்துறை அமைச்சர்கள் கூட்டத்தை அவர் இன்று தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த கூட்டத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான ஆக்கபூர்வமான விவாதங்கள் நடைபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில், சுற்றுச்சூழல் அலுவலர்கள், கொள்கையாளர்கள், நிபுணர்கள் கலந்து கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கவுள்ளனர்.

பிரிக்ஸ் உச்சிமாநாடு, புதுதில்லியில் அடுத்த மாதம் 12ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், இந்த கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

>>>>>><<<<<<

வெளிநாட்டு நிதி பங்களிப்பு திருத்த மசோதா வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்துள்ள பேட்டியில், இந்த மசோதா தொடர்பாக எதிர்க்கட்சியினர் வதந்திகளை பரப்பி வருவதாக குறை கூறியுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து நிதி வருவதை முறைப்படுத்த இந்த மசோதா வழிவகை செய்யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இம்மசோதாவை கூட்டு நாடாளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்றும் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கேரளம் மாநிலம், Vizhinjam துறைமுகத்தில் முழு அளவிலான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பணிகள் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

கேரள முதலமைச்சர் திரு. V.D. Satheesan, ஏற்றுமதி செய்யப்பட்ட பெட்டகங்களுடன் கூடிய இரண்டு கப்பல்களின் சேவையை இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இதுவரை சரக்கு மாற்று துறைமுகமாக செயல்பட்டு வந்த Vizhinjam துறைமுகம், இன்று முதல் ஏற்றுமதி இறக்குமதியுடன் கூடிய துறைமுகமாக செயல்படுவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்திய ராணுவ தளபதி, ஜென்ரல் Dhiraj Seth-க்கு நேபாள ராணுவத்தின் கௌரவ ஜென்ரல் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

நேபாள தலைநகர், காத்மண்டுவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அந்நாட்டு அதிபர் திரு. Ramachandra Paudel, அவருக்கு இப்பட்டத்தை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அந்நாட்டு துணை அதிபர் திரு. ராம்சகாய பிரசாத், வெளியுறவு அமைச்சர் திரு. Shisir, அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு. Naveen Srivastav உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, நேபாளம் சென்ற ராணுவ தளபதி ஜென்ரல் Dhiraj Seth, அந்நாட்டு ராணுவ தளபதி ஜென்ரல் Sigdel-வுடன் இருநாட்டு ராணுவ ஒத்துழைப்பு குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசம், பஞ்சாப், குஜராத் மாநிலங்களுக்கான பிஜேபி பொறுப்பாளர்களை அக்கட்சித் தலைவர் திரு. நிதின் நபின் அறிவித்துள்ளார்.

உத்தரபிரதேசத்தில் திரு. Vinod Tawde-யும், பஞ்சாபில் டாக்டர் Satish Poonia-வும், குஜராத்தில் திரு. Tarun Chugh-ம் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

கர்நாடக அரசு பணியாளர் தேர்வாணைய முறைகேடு தொடர்பாக, 21 இடங்களில் அமலாக்கத்துறை இன்று சோதனை நடத்தியது.

கால்நடைத்துறை அதிகாரிகள் பதவிக்கான தேர்வில் முறைகேடு நடைபெற்றதாக கூறி, பதவிநீக்கம் செய்யப்பட்ட அரசு பணியாளர் தேர்வாணையத் தலைவர் திரு. Shivasankarappa, உறுப்பினர் திருமதி. Shanta உள்ளிட்டோரின் இல்லங்களில் அமலாக்கப் பிரிவு சோதனை நடத்தியது.

இந்த முறைகேடு தொடர்பாக, கர்நாடகா மட்டுமல்லாமல் அஹமதாபாதில் உள்ள தேர்வு முகமை அலுவலகங்களிலும் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பஞ்சாபில், மனநலம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாக அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மனநல பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாக அந்த துறை கூறியுள்ளது.

மனநல ஆலோசனை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. Balbir Singh தெரிவித்துள்ளார்.

கடந்த 7 மாதங்களில் 45 வயதுக்குட்பட்ட 709 பேர் மனநல பிரச்சினைகளால் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, செமிகான் இந்தியா மாநாட்டை புதுதில்லியில் நாளை தொடங்கி வைக்கிறார்.

இந்த 3 நாள் மாநாட்டில் இந்தியா, ஜப்பான், சிங்கப்பூர், தென்கொரியா, மலேசியா, ஜெர்மனி உள்ளிட்ட 40 நாடுகளின் 500 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இதுதொடர்பாக, புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு. எஸ் கிருஷ்ணன், இந்த மாநாட்டில் ஜப்பான், தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய 6 நாடுகளின் சர்வதேச அரங்குகள் இடம்பெறவுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின், திருப்பூர் மாவட்டத்தில், ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம் சார்பில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சிகள் மூலம் தங்களது வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளதாக பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 56 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

Zambia நாட்டு அதிபராக Hakainde Hichilema மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதிபர் தேர்தலில் அவர் 51 சதவீத வாக்குகள் பெற்று, வெற்றி பெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

திரு. Hakainde Hichilema 29 லட்சத்து 65 ஆயிரத்து 326 வாக்குகள் பெற்றதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. Brian 18 லட்சத்து 56 ஆயிரத்து 217 வாக்குகள் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, வாக்கு எண்ணும் மையங்களில் நிகழ்ந்த வன்முறையை அடுத்து, வாக்கு எண்ணும் பணி நிறுத்தி வைக்கப்பட்டது.

பின்னர், பலத்த பாது இடையே மீண்டும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

>>>>>><<<<<<

இந்தியாவில் வாக்காளர் அடையாள அட்டை மூலம் தேர்தல் நடைபெறுவது மிகவும் சிறந்தது என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் பாராட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar-ருடன் தாம் ஆலோசனை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அப்போது, அமெரிக்காவில் புகைப்பட அடையாள அட்டை இல்லாமல் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்று திரு. Gyanesh Kumar, தம்மிடம் கேட்டதாக கூறியுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க நாடாளுமன்றத்தில் தேர்தல் சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க தேர்தலில் அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை கட்டாயமாக்க இந்த மசோதா வழிவகை செய்கிறது.

>>>>>><<<<<<

இஸ்ரேலின் Gaza - பகுதியில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா உறுதிபூண்டிருப்பதாக அந்நாடு கூறியுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் திரு. Benjamin Netanyahu-வுடன் ஆலோசனை மேற்கொண்ட அமெரிக்க சிறப்பு பிரதிநிதி திரு. Jared Kushner, இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று கூறினார்.

காஸா பகுதியில் சண்டை நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட்டில் தொடர் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ராஞ்சி, ஜாம்ஷெட்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கனமழை காரணமாக, தாழ்வான இடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இதனிடையே, மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

Galle-யில் நடைபெறும் இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று, உணவு இடைவேளை வரை இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 116 ரன் எடுத்துள்ளது.

இந்தியா தற்போது 294 ரன் முன்னிலையில் உள்ளது.

முதல் இன்னிங்ஸில் இந்தியா 462 ரன்னும், இலங்கை 284 ரன்னும் எடுத்துள்ளன.

>>>>>><<<<<<

உலக பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென், இன்று ஆஸ்திரியாவின் Collins Valentine-ஐ எதிர்கொள்கிறார்.

தில்லியில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 6.30-க்கு தொடங்குகிறது.

மகளிர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Treesa Jolly - Gayathri Gopichand இணை இன்று அமெரிக்காவின் Lauren – Allison இணையை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<